அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 19/97(1)

எனது இல IX/543/ச1272/30

அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.
1997-12-31 ஆந் தேதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ,
திணைக்களத் தலைவர்களுக்கும் , அரச
கூட்டுத்தாபனங்களின் நியதிச் சட்டசபைகளின்
தலைவர்களுக்கும் ,

## நடமாடும் தொலைபேசி வழங்கல்.

மேற்படி விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 19/97 ஆம் இலக்க 1997.08.25 ஆந் தேதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 (11) ஆம் பந்தியின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேற்படி பந்தி பின்வருமாறு திருத்தப்படுகிறது.

" வெளி அழைப்புக்களுக்காக மாதாந்த தொலைபேசி கட்டணம் ஆகக் குறைந்தது 2000/-ரூபாவுக்கு வரையறுக்கப்படல் வேண்டுமென்பதுடன் தொலைபேசி பில் பத்திரங்களில் 10% வீதத்தை இவ் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுதலும் அதற்கு மேலதிகமான மாதாந்த தொலைபேசி கட்டணம் 2000/- ரூபாவுக்கு மேற்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறு அதிகரித்த தொகையை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுதலும்.

02. இந்தச் சுற்றறிக்கை பொதுத் திறைச்சேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இத்தீர்மானம் 1997.08.25. ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க, நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

nada/w/2